**தேதி**: பிப்ரவரி 15 , 2014

# பயங்கர கனவு முடிந்துவிட்டது

**- அருண் ஜேட்லி**

எதிர்க்கட்சி தலைவர் ( மாநிலங்களவை )

கடைசியில் அந்த பயங்கர கனவு ஒரு முடிவுக்கு வந்துவிட்டது. இது வரை தில்லி கண்டிராத ஒரு மோசமான ஆட்சி முடிவுக்கு வந்துவிட்டது. தில்லி துணை நிலை ஆளுனரிடம் தன் ராஜினாமாவை ஆம் ஆத்மி கட்சி அரசு சமர்ப்பிக்க முடிவு செய்தது. கடந்த 49 நாட்களில் தில்லி இது வரை தான் பார்த்திரான ஒரு அரசாங்கத்தை கண்டது. இந்த அரசிடம் ஒரு செயல் திட்டமோ ஒரு சித்தாந்தமோ இல்லை. இது ஒரு பொதுஜன அபிப்பிராயத்தால் உருவான, வாய்ச்சவடால் அரசாகவே இருந்தது.

கட்டுப்பாடு இல்லாத புத்திசாலித்தனமான அரசியல் – என்பதுதான் ஆம் ஆத்மி கட்சியின் தில்லி அரசின் கோஷமாக இருந்ததாகவே தோன்றுகிறது. பெரும்பான்மை பலமில்லாத ஒரு அரசு இது. இதற்கு வெறும் 28 இடங்களே இருந்தன. பா.ஜ.க.தான் அதிக இடங்களைக் கைப்பற்றிய கட்சி. வெட்கமே இல்லாமல் காங்கிரஸ் கட்சியின் ஆதரவை ஆம் ஆத்மி கட்சி தங்கள் பெரும்பான்மை பலத்தை நிரூபிக்க எந்த மன உறுத்தலுமே இல்லாமல் ஏற்றுக்கொண்டுவிட்டது. இதன் பெரும்பாலான எம்.எல்.ஏக்கள் அனுபவமில்லாதவர்கள். அவர்களுக்கு பக்குவமும் கிடையாது. சில நேரங்களில் அவர்கள் வினோதமாகவும் நடந்துகொண்டார்கள். அவர்களிடம் கிளர்ந்தெழும் அணுகுமுறை இருந்தது, ஆனால் எந்த வகையான அதிகாரத்துக்கும் அந்நியமானவர்களாக இருந்தனர்.

ஆம் ஆத்மி கட்சி அரசு தில்லியில் குடிநீர் இணைப்புத் திட்டத்தை விரிவாக்க முடிவு செய்திருந்தனரா? அவர்கள் உண்மையிலேயே தில்லியில் சுகாதார வசதிகளை அதிகரிக்கும் திட்டத்தில் தீவிரமாக இருந்தனரா? புதிய பள்ளிகளையும் கல்லூரிகளையும் தில்லியில் திறக்க முடிவு செய்திருந்தனரா? தில்லியில் தொழில்நுட்ப கல்வி நிறுவனங்களை விரிவாக்கத் திட்டமிட்டிருந்தனரா? தில்லி மெட்ரோவை அடுத்தக் கட்டத்திற்குக் கொண்டு செல்வது பற்றி என்ன நினைத்திருந்தார்கள்? மேலும் பல மேம்பாலங்களையும் சிறந்த பொதுப் பணித் துறை சாலைகளையும் அமைப்பதைப் பற்றி நினைத்துப் பார்த்தனரா? இவை அனைத்தும் இந்த பெரிய மாநகரத்தில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு மேம்படுத்தப்பட வேண்டிய களங்கள். இவைதான் உண்மையாக நிர்வகிக்கப்பட வேண்டியவை. இங்கு குறிப்பிட்ட எந்த பிரச்சினைகளைப் பற்றி நினைப்பதற்கும் இந்த 49 நாட்கள் ஆட்சியில் அரசுக்கு நேரமே இல்லை.

இந்த அரசு வெறும் கிளர்ந்தெழ வைக்கும் பிரச்சினைகளில் மட்டுமே கவனம் செலுத்துவது என்ற அணுகுமுறையைப் பின்பற்றியது. இந்த அரசு மத்திய உள்துறை அமைச்சருக்கு எதிராக, துணை நிலை ஆளுநருக்கு எதிராக, போலீஸ் கமிஷனருக்கு எதிராக மற்றும் ஆப்பிரிக்க பெண்களுக்கு எதிராக கிளர்ச்சி செய்தது. பொய்யான பிரச்சினையையும், கற்பனையான எதிரிகளையும் உருவாக்கிக் கொண்டு, அந்தக் கற்பனை எதிரிகளைத் தாக்கி தொடர்ந்து வலுவான பிரச்சாரம் செய்வதுதான் இவர்களுடைய அணுகுமுறை. இந்தக் கட்சியின் தலைவர்கள் மட்டுமே நேர்மையானவர்கள் என்றும் மற்ற அனைவருமே எதிலும் சமரசம் செய்துகொள்பவர்கள் என்றும் வெளியே கூறும் அளவுக்கு திமிர் பிடித்தவர்களாக இருந்தனர். இவர்கள் ஆட்சி அமைத்த நாளிலிருந்து ஒவ்வொரு நாளும் தங்களுடைய

புகழை இழந்து வந்தனர். தலைமைச் செயலகத்தில் அமர்ந்திருக்கும் தங்கள் தலைவர்கள் 'சீனக் கடையில் ஒரு காளை' (கவனக்குறைவாக நடந்துகொள்வது) போல இருப்பதை உணர்ந்தார்கள். இவர்கள் தெருக்களுக்குத்தான் பொருத்தமானர்கள். எனவே, அவர்களாகவே வெளியேறும் மார்க்கத்தைத் தேடிக் கொண்டு விட்டனர். ஜன் லோக்பால் மசோதா காரணமாக என்ற விஷயம் கடைசி நாள் வரை ரகசியமாகவே வைக்கப்பட்டிருந்தது. 'லோக் பால் மசோதாவில் அடங்கியுள்ளவிஷயம் மத்திய சட்டத்திற்கு முற்றிலும் மாறுபட்டது அல்ல. ஆனால், இவர்கள் மத்திய சட்டத்தை ஒப்பிடுகையில் இது ஒரு புரட்சிகரமான சட்டம் என்ற தவறான பொய்ப் பிரச்சாரத்தை மேற்கொண்டனர். ராஜினாமாவுக்கு சாக்குபோக்கு கண்டுபிடிக்கும் பொருட்டு, வழக்கமான நடைமுறையான சட்டப் பேரவை அனுமதிக்கு சவால் விடும் முறையில் நடந்துகொள்வது என்று முடிவு செய்தனர்.

ஆம் ஆத்மி அரசு வெளியேறிவிட்டது. ஒரு மாற்று அரசியல் கட்சி வரவேண்டும் என்று விரும்பி இவர்களுக்கு ஓட்டளித்த மக்களின் நம்பிக்கையை இவர்கள் பொய்யாக்கி விட்டனர். இவர்களது மாற்று அரசியல் ஜனரஞ்சக, வாய்ச்சவடால், பொய்யான ஆனால் நிர்வாகத் திறன் இல்லாத அரசியல்தான். நல்லவேளையாக அந்த பயங்கர கனவு முடிவுக்கு வந்துவிட்டது.

✶✶✶✶✶